

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு திரையரங்கம் மற்றும் மல்டிபிளக்ஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆர். மூர்த்தி, தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர் முரளி என். இராமசாமி, செயலாளர்கள் எஸ். கதிரேசன் மற்றும் ஆர். ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு திரையரங்கம் மற்றும் மல்டிபிளக்ஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் வி.டி.எல். சுப்பு, செயற்குழு உறுப்பினர் டி.என்.டி. ராஜா, பொருளாளர் சந்திரபிரகாஷ் ஜெயின், தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் அருள்பதி, துணைத் தலைவர் கே. ராஜன் ஆகியோர் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

10 ஆண்டுகளாக அ.தி.மு.க.ஆட்சியில் நிறைவேற்றப் படாத கிராம மக்களின் கோரிக்கை ஏற்பு!

# திருப்புவனம் தாலுகா பழையனூரில் ரூபாய் 3½ கோடியில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க முதல்வர் உத்தரவு!

## அமைச்சர் பெரியகருப்பன் அடிக்கல் நாட்டினார்!

சிவகங்கை. ஜுலை 22.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகாவில் பழையனூர் கிராமம் உள்ளது. இந்த கிராமத்தைச் சுற்றி சுமார் 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன .மைய கிராமமாக பழையனூரிலிருந்து திருப்பாச்சேத்தி, சிவகங்கை செல்வதற்கு அங்குள்ள வைகை ஆற்றுப்படுகையை கடந்து செல்ல வேண்டும் .வெள்ளம், மழைக்காலங் களில் தண்ணீர்அதிகமாக வரும் போது பள்ளி மாணவ மாணவிகள் பொதுமக்கள் அவ்வழியே செல்ல முடியாமல் மிகவும் தவித்து வந்தார்கள். இதனால் 8 கிலோ மீட்டர் தூரம் சுற்றி அவர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்து வந்தது.

இது குறித்து முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் பொதுமக்கள் அங்கு ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை மனு கொடுத்தார்கள். அது நிறை வேற்றப்படாமல் இருந்தது.

இந்நிலையில் கடந்த சட்டமன்ற தேர்தலின் போது கிராமமக்கள் மேம்பாலம் அமைத்து தருமாறு வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமாரிடம் கோரிக்கை வைத்தார்கள். அவரும் தான் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டால் மேம்பாலம் அமைத்திட முயற்சி எடுப்பதாக உறுதி கூறினார். சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் நெடுஞ்சாலை த்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோரிடம் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் பழையனூரில் பாலம் அமைக்க வலியுறுத்தி கோரிக்கை மனு கொடுத்தார்கள்.

இதுகுறித்து முதல்வர் உத்திரவின் பேரில் பழையனூரில் உயர்மேம்பாலம் ரூபாய் 3கோடியே 57லட்சத்தில் நபார்டு கிராமச்சாலை கள்முலம் அமைத்திட உத்திரவிடப்பட்டது. அதன்படி உயர் மட்ட மேம்பாலம் கட்டுவதற்கான பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. புதிய மேம்பாலத்திற்கான கட்டுமானப் பணியினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் திருப்புவனம் பேருராட்சிமன்ற தலைவர் த.சேங்கை மாறன், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் திருமதி ஜுனூ, மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனர் ரவிச்சந்திரன், துணைப் பதிவாளர் மாரிச்சாமி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

நிகழ்ச்சியில் ஒன்றிய குழு தலைவர் பா.சின்னையா துணைத்தலை வர் மூர்த்தி முன்னாள் எம்.எல்.ஏ. மாரியப்பன், கென்னடி, ஒன்றிய குழு உறுப்பினர் சுப்பையா, ஈஸ்வரன், ஒன்றிய செயலாளர் கடம்பசாமி, நிர்வாகிகள் அண்ணாமலை,பாண்டிகிருஸ்ணன், டி.ஆர்.சேகர் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், புதுார் கண்ணன், ஒன்றியதுணைசெயலாளர் முத்துகுமார் உள்பட அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். பத்தாண்டு காலகோரிக்கையை நிறைவேற்றி தந்த தமிழக முதல் வர் தளபதி அவர்களுக்கும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஏ.வ.வேலு, இதற்காக தொடர் முயற்சி மேற்கொண்ட அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. திருப்புவனம் பேருராட்சி மன்றத்தலைவர் த.சேங்கை மாறன் ஆகியோருக்கு 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் விழா மேடையில் நன்றி தெரிவித்தார்கள்.

# இராமநாதபுரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில்

இராமநாதபுரம், ஜுலை 22-

திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தமிழக மக்கள் எழுச்சி கழகம் இணையும் விழா மற்றும் கலைஞரின் நூற்றாண்டு மாபெரும் பொதுக்கூட்டம் இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணியில் நடைபெற்றது இக்கூட்டம் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆதித்யன் ஒன்றிய செயலாளர் உதயகுமார் நாகேஸ்வரன் முன்னிலை வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழக மக்கள் எழுச்சி கழகத்தின் நிறுவனர் டி. ராஜேந்திரன், மாநில ஒருங்கிணைப்பாளர் பஷீர் அகமது, மற்றும் கழகத்தைச் சேர்ந்த அத்தனை நிர்வாகிகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டனர் இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்கள் மேலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்களும் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்தவர்களும் தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்கள்.

இவ்விழாவிற்கு பின்பு பேசிய இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்து ராமலிங்கம், எம் எல் ஏ, இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளும் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது அனைத்து கால்வாய்களும் துர்வாரப்பட்டுள்ளது ஒவ்வொரு கிராமத்திற்கும் பேருந்து நிறுத்தம், கலையரங்கம், சமுதாயக்கூடம், கிராமச்சாலைகள், இது போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளது என்று கூறினார்.

இவ்விழாவில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், முன்னாள் அமைச்சர்கள் வா. சத்தியமூர்த்தி, டாக்டர் சுந்தர்ராஜன், நகர்மன்ற தலைவர்கள் இராமநாதபுரம் ஆர் கே. கார்மேகம், துணை தலைவர் டி ஆர். பிரவீன் தங்கம், ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர்கான், பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, மற்றும் ஒன்றிய செயலாளர் வி .வாசுதேவன், குணசேகரன், வழக்கறிஞர் கே கதிரவன், வழக்கறிஞர் கே ஜே பிரவீன், கிருஷ்ணமூர்த்தி, கீழக்கரை நகர செயலாளர் பஷீர் அகமது இராமநாதபுரம் ஒன்றிய பெருந்தலைவர் கே. டி. பிரபாகரன், பி .கே. குமார் /பி. டி ராஜா, வழக்கறிஞர் பூமிநாதன், மற்றும் மாவட்ட மாநில நகர பேரூர் கழக கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் வருகின்ற 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் இராமநாதபுரம், பட்டிணம்காத்தான், கிங்ஸ் பேலஸ் மகாலில் மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்கண்ட கூட்டத்தில் கழக துணைப்பொதுச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் கதர் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற இருக்கிறார்கள்.

எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. கழக தலைவர் / தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரத்தில் கலந்து

கொள்ளும் மண்டல அளவிலான பாகமுகவர்கள் (BLA2) கூட்டம்

2. மீனவர்கள் சந்திப்பு மாநாடு

3. கழக ஆக்கப்பணிகள்

**காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ.**
செயலாளர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.



திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தமிழக மக்கள் எழுச்சி கழகம் இணையும் விழா மற்றும் கலைஞரின் நூற்றாண்டு மாபெரும் பொதுக்கூட்டம் இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணியில் இக்கூட்டம் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது.

# ஓ... குக்கித் தாய்மாரே!



கொத்துக் கொத்தாய்
மலையிறங்கிவரும்
நச்சரவங்கள் போல்தான்
அந்த வீடியோவில்
மணிப்பூர் நபும்சகர்கள்
ஆவேசமாய்
வந்து கொண்டிருந்தார்கள்...
இரண்டு
அப்பாவி முயல்களை
விரட்டியபடி !


★★★

மானமழிய
மனமழிய
மருண்ட விழி சோர
முடிவற்ற பாதையினூடே
தட்டுத் தள்ளாடி வந்த
பெண்மையைக் காணக் காண
நெஞ்செரிந்து எரிந்து
ஆலகால நீலமாகியது.

★★★

ஏ...
மலைசாதியே என்று
மலிந்து பேசிய மைத்தேயிகளே...
நீங்கள்
மனித சாதியே இல்லையென்று
உலகரங்கம் இன்று
தீர்ப்பளித்துவிட்டதே !

★★★



நாணப் போகிறீர்களா ?
இல்லை
நாண்டு கொண்டு
சாகப் போகிறீர்களா ?

★★★

தாயை தங்கையை
ஈரக்குலை நடுங்க
ஈனரக்கரென
அடித்திழுத்து வந்தவரெல்லாம்
சோறுண்ணும் ஜென்மங்கள்தானா ?
உங்களுக்கு,
ஆதார் கார்டும் ஒரு கேடா ?

***

புயலிடைச் சிக்கிய
இள வாழையென,
'ஐயோ' என, 'அம்மே' என
விதிவிட்டபடி வீதிவழி வந்த
நாரியரிருவரும்
பாரத மாதாவின்
மகள்களில்லையா ?

★★★

நாய்கள் செய்யுமோ
இந்த நாராசத்தை?
பேய்களும்தான் செய்யுமோ
இந்தப்
பெரும் பாதகத்தை?

★★★

அறுநூறுக்கும் மேலான
உயிர்களையும் குற்றுயிர்களையும்
உள்ளிறக்கிய பின்னும்
கோரக் குடலின்னும் நிரம்பலையோ ?

★★★

1939 ல் வெடித்த
'நூபி லான்' எனும்
பெண்களின் போர்
மீண்டுமிங்கே
வெடித்தெழ வேண்டுமோ ?

★★★

அன்றொரு நாள்
வியட்நாம் மண்ணில்
அறியாத பிள்ளை ஒன்று
அம்மணமாய் வந்ததற்கே
ஆவி பதறிப் போன
நாகரீக உலகம்
இன்று
சம்மட்டியால் அடித்ததுபோல்
சாய்ந்து கிடக்கிறதே !

★★★

ஏ...
கருப்பு இதயம் படைத்த
மணிப்பூர் மூடர்களே...
உங்களை
கண்ணகி பிறந்த மண்
காறித் துப்புகிறது.

★★★

மே நான்கில் நடந்த
பாதகச் செயலுக்கு
ஜூலையில் மாரடிக்கும்
ஆட்சியாளர்களை எண்ணி
நாகரீக உலகம்
'ச்ச்சீச்சீ' கொட்டிப் பழிக்கிறது.

★★★

மூட சனங்கள்
மைத்தேயி என்றும்
குக்கி என்றும் பிரிந்து நிற்க...
மாதக்கணக்கில்
மானுடம் நசுங்கிய போதும்
நீரோ மன்னனாய்
பாராமுகம் காட்டிய
ஆட்சியாளர்களை நம்பி
இனிப் பலனில்லை.

★★★

நீதிமன்றமே தலையிடுக !
கறந்த இடத்தையும்
பிறந்த இடத்தையும்
ஊர் பார்க்க இழுத்து வந்து
இந்தியப் பெண்மையை
இடுகாட்டிலிட்ட அந்த
உன்மத்த நாய்மகன்களை
சட்டத்தின் வழியே ஆழ சபித்திடுக !


★★★

ஜனநாயகத்துக்கு
ஆயிரம் புறவாசல்கள்.
போகட்டும்.
எங்கள் அன்னையரின்
ஜனனேந்திரிய மானத்தை
இனியேனும் காத்திடுக !

★★★

ஓ... குக்கித் தாய்மாரே !
வெட்கித்
தலைதாழ வேண்டியது
நீங்களல்ல !
உங்கள் கற்பறத்தை
காட்டு நாய்களால்
களவாடிவிட முடியாது !

★★★




ஓ...
மணிப்பூர் மாதரசிகளே !
பிறப்பொக்கும்
எல்லா உயிர்க்கும்
என்றோதிய
வள்ளுவன் பிறந்த
மண்ணுமக்கு
என்றும் துணையிருக்கும் !
முன்னிலும் மிடுக்கொடு
எழுக !
பொலிக !

★★★



**ஸ்ரீராம் சர்மா**
எழுத்தாளர்–இயக்குநர்